2004 நவம்பர் 17]

ஏற்றதற்குப் பிறகுதான் தமிழகத்தில் இதுவரையில் 3,500 ஆலயங்களில் திருப்பணி செய்து குடமுழுக்கு நடைபெற்று இருக்கின்றன. இன்னும் தாங்கள் சொல்லக்கூடிய அந்த ஆலயங்கள் எல்லாம் தேர்வு செய்யப்பட்டு, எந்த எந்த ஆலயங்கள் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருப்பணி செய்யப்படாமல் இருக்கின்றனவோ, அவை எல்லாம் தேர்வு செய்யப்பட்டு நிதி ஆதாரம் உள்ள ஆலயங்களில் இருந்து நிதியைப் பெற்று, அங்கு இருக்கக்கூடிய பக்தகோடி மக்களுடைய நிதியைப் பெற்று, பல்வேறு ஆலயங்களில் திருப்பணி தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மாவட்டத்திலே சோளிங்கரில் இருக்கக்கூடிய ஸ்ரீ லஷ்மி நரசிம்ம ஸ்வாமி கோயில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனிக் கேள்வி போடவும்.

வினா எண் 5, திரு. க.ரா. கந்தசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

5—

நடமாடும் மருத்துவமனை

***31447—திரு. க.ரா. கந்தசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்தியமங்கலம் வட்டம், தாளவாடி ஒன்றியத்தில் நடமாடும் மருத்துவமனை மருத்துவர் குழுவுடன் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சத்தியமங்கலம் வட்டம், தாளவாடி ஒன்றியத்திலே நடமாடும் மருத்துவமனை மருத்துவர் குழுவுடன் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

[2004 நவம்பர் 17

திரு. க.ரா. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்' என்று இயேசு சொன்னார். ஆனால் தட்டாமலும் கேட்காமலும் கொடுக்கக்கூடியவர் இந்தியத் திருநாட்டின் மனித நேயம் மிக்க முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். கேட்டது ஒன்றாக இருந்தாலும், இரண்டு நடமாடும் ஊர்திகளை மருத்துவக் குழுவில் அனுமதித்து, சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றிய மலைப் பகுதிக்கும், தாளவாடி ஊராட்சி ஒன்றிய மலைப் பகுதிக்கும் வழங்கியதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்கு, அம்மலைவாழ் மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியை காணிக்கையாக்கி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. மணி.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை மாநிலம் பூராவிலும் இருக்கிற ஒரு பிரச்சினை என்கிற காரணத்தினால், இதுபோன்ற மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பிற பகுதிகளிலும், குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய மலைப் பிரதேசப் பகுதிகளில் இந்த நடமாடும் மருந்தகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பு ஏற்றவுடனே 2001-லே இருந்து இதுவரை கிட்டத்தட்ட 45 நடமாடும் மருத்துவக் குழுக்கள் செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றன. ஆண்டு ஒன்றுக்கு கிட்டத்தட்ட 2 1/4 இலட்சம் ரூபாய் மருந்துகள், மாத்திரைகள் இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல், அந்த ஊர்திக்கு ஒரு இலட்சம் ரூபாய் செலவில் டீசல் போடப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் இருக்கக்கூடிய பகுதிகளிலே குறைந்த இடங்களில்தான் மலைவாழ் மக்கள் இருக்கிறார்கள். நீங்கள் குறிப்பிட்ட இடம் எது என்று சொல்லுங்கள். அதற்குத் தக்க பதில் கண்டிப்பாக அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 6, திரு. கா.தி. இளையகண்ணு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.